அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அனைத்துலகப் பொதுத்தேர்வு 2025
# தமிழ் - ஆண்டு 12

**புலன்மொழி வளத்தேர்வு** **வாசித்தல்**

இலக்கியத் திறமையானது, கடந்த நூற்றாண்டில் அறிவியல் சார்ந்த தொழிற்துறையாக உருவெடுத்துள்ளது. எமது பழந்தமிழ் இலக்கியங்களின் சிறப்பை வெளிப்படுத்தவும் இக்கால இலக்கியங்களின் போக்கை அறியவும் பிற இலக்கியங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கவும் திறனாய்வு பெரிதும் துணைபுரிகிறது. இலக்கியம் வாழ்க்கை பற்றியதாகத்தான் அமையவேண்டும். அதன் பாடுபொருள் வாழ்க்கையே என்று பொதுவாகப் பலரும் கூறினாலும், தமிழ் மரபு இதனை வலியுறுத்திச் சொல்கிறது. தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் ஆகியன மட்டுமல்லாமல், இலக்கியம் பற்றியும் பேசுகிறது. இந்நூல் கூறும் அகம், புறம் எனும் இரண்டும் இலக்கியத்தின் பாடுபொருள்களாகும். இவற்றைக் கருவாகக் கொண்டதுதான் அன்றைய இலக்கியக் கொள்கை. பொருள் அதிகாரம் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்பன பற்றிப் பேசுகிறது. இவற்றுள் முதற்பொருளும் கருப்பொருளும் இயற்கையையும் இயற்கையோடு இணைந்தவற்றையும் பேசுகின்றன. உரிப்பொருள் என்பது காதல் அல்லது அக வாழ்க்கை பற்றியது. இதுவே இன்றியமையாதது. முதற்பொருளும் கருப்பொருளும் இல்லாவிடினும் உரிப்பொருள் அமைந்திருக்க வேண்டும். இவ்வாறு தொல்காப்பியம் இலக்கணம் மட்டுமல்ல இலக்கியம் பற்றியும் பேசுகிறது.